FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

~~(Under Section 154 Cr.P.C)~~

த.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8120391

1. District திருநெல்வேலி மாவட்டம் | PS: ஊழல் தடுப்பு மற்றும் காவல்நிலைகண்காணிப்பு பிரிவு | Year2026 ஆண்டு | FIR No.06/2026 மு.த.அ. எண் | Date:18.07.2026 நாள்

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 BNSS | Sections பிரிவுகள்: 7(a) r/w 106

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 17.07.2026 | Date to : நாள் வரை

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 12.00 hrs to | Time to : நேரம் வரை 17.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.07.2026 | Time : நேரம் 17.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் திசையன்விளை, Sதிருநெல்வேலி மாவட்டம். 62 கி.மீ தென் கிழக்கு.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.தங்கராஜ், | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.T.மகாலிங்கம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27.03.1970 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் | (g) Address : முகவரி திருநெல்வேலி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு.ஜ.ரமேஷ், வருவாய் வட்டாட்சியர், திசையன்விளை, 2) திரு.ரா.கார்த்திக், கிராம நிர்வாக அலுவலர், கரைசுத்துபுதூர் கிராமம், 3) திரு.அ.பெரியதுரை முத்தையா, கிராம உதவியாளர், கரைசுத்துபுதூர் கிராமம், 4) திரு.சேவியர் பாலசிங், த/பெ.திரு.சூசை மாணிக்கம், கதவு எண்.36/4, தெற்கு தெரு, இரம்மதபுரம், 5) திருமதி.ம.க.தர்யா, அ-6 பிரிவு இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், திசையன்விளை, 6) திருமதி.வி.மெர்சி கிரேஸ், அ-5 பிரிவு இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், திசையன்விளை, 7) திரு.மி.ஜெபா, அ-2 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், திசையன்விளை 8) திரு.மு.முத்து செல்வராதி, அ-1 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், திசையன்விளை 9) திரு.க.கப்பையா பாண்டி, அலுவலக உதவியாளர், வட்டாட்சியர் அலுவலகம், திசையன்விளை, 10) திரு.ஏ.பெருமாள், நில அளவை ஆய்வாளர், சேரன்மகாதேவி கோட்டம், 11) திரு.ரா.கயம்புலிங்க ஹரிஷ், புல உதவியாளர் (தற்காலிகம்), திசையன்விளை மற்றும் 12) திரு.ஆர்.நம்பி நாராயணன், வாகன ஓட்டுநர், வட்டாட்சியர் அலுவலகம், திசையன்விளை.

Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Does Not Arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Does Not Arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Does Not Arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 18.07.2026-ம் தேதி சுமார் 17.00 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி D.ராபின் ஞானசிங் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 17.07.2026-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர் M.தங்கராஜ், துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. பெறுனர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. அய்யா, பொருள்: திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வட்டாட்சியர் அலுவலகத்தின் தரைதளம் மற்றும் முதல் தளத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக. திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வட்டாட்சியர் அலுவலகத்தின் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் பணிபுரியும் அலுவலக ஊழியர்கள் பொது மக்களிடம் இடைத்தரகர்கள் மூலமாக லஞ்சப்பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில், திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும், கண்காணிப்பு பிரிவு காவல்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.7.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

18/7/2026

15. Date & Time of despatch to the court: 18/07/2026 at 18.45 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் D. Robin Gnanasingh
Rank: நிலை ..... No. எண் .....

ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங் மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் மேற்படி திசையன்விளை வட்டாட்சியர் அலுவலகத்தின் தரைதளம் மற்றும் முதல் தளத்தை மாலை 17.00 மணி முதல் 22.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த திசையன்விளை வருவாய் வட்டாட்சியர் திரு.ஜ.ரமேஷ் என்பவரை சோதனை செய்த போது, அவரது பேன்டின் இடது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.1,100/-ம், கரைசுத்துபுதூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ரா.கார்த்திக் என்பவரை சோதனை செய்த போது, அவரது கையில் வைத்திருந்த பேக்கில் இருந்த பணம் ரூ.5,000/-ம், கரைசுத்துபுதூர் கிராம உதவியாளர் திரு.அ.பெரியதுரை முத்தையா என்பவரை சோதனை செய்த போது, அவரது பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.1,100/-ம் மற்றும் அவரது பெயரில் திசையன்விளை இந்தியன் வங்கியில் உள்ள சேமிப்பு கணக்குடன் இணைக்கப்பட்டுள்ள அவரது கைபேசி எண்ணிற்கு Google Pay மூலம் தனிநபர்களால் வரவு வைக்கப்பட்ட பணம் ரூ.41,000/-ற்கான விபரம் Screen Shot எடுத்தும், திசையன்விளை தாலுகா, இரம்மதபுரம், தெற்கு தெரு, கதவு எண்.36/4-ல் வசிக்கும் திரு.சூசை மாணிக்கம் மகன் திரு.சேவியர் பாலசிங் என்பவரை சோதனை செய்த போது, அவரது பேன்டின் இடது பக்க முன் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் வைத்திருந்த பணம் ரூ.11,000/-ம், அ-6 பிரிவு இளநிலை வருவாய் ஆய்வாளர், திருமதி.ம.க.சூர்யா என்பவரை சோதனை செய்த போது, அவரது பேக்கில் வைத்திருந்த பணம் ரூ.700/-ம், அ-5 பிரிவு இளநிலை வருவாய் ஆய்வாளர், திருமதி.வி.மெர்சி கிரேஸ் என்பவரை சோதனை செய்த போது, அவரது பேக்கில் வைத்திருந்த பணம் ரூ.500/-ம், அ-2 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.மி.ஜெபா இருக்கைக்கு பின்புறம் இருந்த ஜன்னலின் வெளியே வீசப்பட்ட பணம் ரூ.1,500/-ம், அ-1 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.மு.முத்து செல்வபாரதி இருக்கைக்கு பின்புறம் இருந்த ஜன்னலின் வெளியே வீசப்பட்ட பணம் ரூ.500/-ம், அலுவலக உதவியாளர் திரு.சு.சுப்பையா பாண்டி என்பவரது கருப்பு நிற பர்ஸ் மற்றும் அதில் இருந்த பணம் ரூ.3,000/- மற்றும் அவரது ஓட்டுநர் உரிமத்தின் நகல் TN72V20130000616-ம், சேரன்மகாதேவி கோட்ட நில அளவை ஆய்வாளர் திரு.ஏ.பெருமாள் என்பவரை சோதனை செய்த போது, அவரது பேன்டின் வலது பின்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணம் ரூ.3,800/-ம், ஒப்பந்த அடிப்படையில் திசையன்விளை புல உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ரா.சுயம்புலிங்க ஹரிஷ் என்பவரை சோதனை செய்த போது, அவரது சட்டையின் இடது முன்பக்க பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.3,000/-ம், வட்டாட்சியரின் அரசு பொலிரோ வாகனம் பதிவு எண்.TN 72 G 1696 டேஷ் போர்டில் இருந்த பணம் ரூ.1,000/-ம், வட்டாட்சியரின் வாகன ஓட்டுநர் திரு.ஆர்.நம்பி நாராயணன் பெயரில் நாங்குநேரி பாரத ஸ்டேட் வங்கியில் உள்ள சேமிப்பு கணக்குடன் இணைக்கப்பட்டுள்ள அவரது கைபேசி எண்ணிற்கு Google Pay மூலம் தனிநபர்களால் வரவு வைக்கப்பட்ட பணம் ரூ.34,900/-ற்கான விபரம் Screen Shot எடுத்தும் ஆக மொத்தம் பணமாக ரூ.32,200/- மற்றும் ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், அவை தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாக

இருக்கலாம் அல்லது கையூட்டாக மேற்படி அலுவலக அலுவலர்களுக்கு கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கை 17.07.2026-ம் தேதி மாலை 17.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே மேற்படி திசையன்விளை வருவாய் வட்டாட்சியராக பணிபுரிந்து வரும் திரு.ஜ.ரமேஷ் மற்றும் மேற்குறிப்பிட்ட 11 நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகாருடன் செயல்முறை நடவடிக்கையை இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம் (M.தங்கராஜ்) துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி (18.07.2026) Sir, Received the complaint today on 18.07.2026 at 17.00 hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.06/2026 u/s 7(a) of PC (Amendment) Act, 2018 r/w 106 BNSS on 18.07.2026 at 18.00 hrs Sd.D.Robin Gnanasingh, Inspector of Police, V&AC, Tirunelveli dt 18.07.2026. Proceedings பின்வருமாறு:- 17.07.2026-ம் தேதி திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேருந்து நிலையத்தில் இருந்து கிழக்கு நோக்கி செல்லும் உடன்குடி ரோட்டில் இருந்து வடக்கு நோக்கி செல்லும் மன்னராஜா கோவில் தெருவில் அரசு மருத்துவமனையின் தெற்குபுறம் பொன்னையா நாடார் தெருவில் தெற்கு பார்த்து அமைந்துள்ள திசையன்விளை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தின் தரைதளம் மற்றும் முதல் தளத்தை திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : 1) திரு.M.தங்கராஜ், துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம். 2) திரு.D.ராபின் ஞானசிங், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. இன்று 17.07.2026-ம் தேதி காலை சுமார் 12.00 மணிக்கு திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக ஊழியர்கள் பொது மக்களிடம் இடைத்தரகர்கள் மூலமாக பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் மற்றும் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங், பெண் தலைமை காவலர் திருமதி.சமுத்திரக்கனி மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மதியம் சுமார் 15.30 மணியளவில் காவல் வாகனம் TN 21 G 0489-ல் புறப்பட்டு நாங்குநேரி, மன்னார்புரம் வழியாக திசையன்விளை பேருந்து நிலையத்திலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் உடன்குடி ரோட்டில் இருந்து வடக்கு நோக்கி செல்லும் மன்னராஜா கோவில் தெருவில் அரசு மருத்துவமனையின் தெற்குபுறம் பொன்னையா நாடார் தெருவில் தெற்கு பார்த்து அமைந்துள்ள திசையன்விளை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தின் மெயின் கேட் வழியாக சுமார் 17.00 மணிக்கு உள்ளே வந்தும், தெற்கு பார்த்து உள்ள தரைதளத்தின் வாசல் வழியே உள்ளே வந்து மேற்கு பக்கம் அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலக பிரதான அறையின் தென்மேற்கு புறம் அமைந்துள்ள வட்டாட்ச்சியரின் தனிஅறையில் வடக்கு

பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த திசையன்விளை வருவாய் வட்டாட்சியர் திரு.ஜ.ரமேஷ் அவர்களிடம் அலுவலகத்தை திடீர் சோதனை செய்ய வந்த விபரம் தெரிவித்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.1,100/- இருந்தது. இது தொடர்பாக மேற்படி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனிநபர் ரொக்க கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கையில் மேற்படி பணம் குறித்து பதிவுகள் எதுவும் செய்யவில்லை. மேலும் மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறாதபடியால் மேற்படி பணம் ரூ.1,100/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர் அவருக்கு எதிரே தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த திசையன்விளை வட்ட துணை வட்டாட்சியர் (தேர்தல்) திரு.தி.இராமச்சந்திரன் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது சட்டையின் முன் பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.700/- இருந்தது. அதை தனிநபர் ரொக்க இருப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது ரூ.700/- பதிவு இருந்தது. எனவே மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி வருவாய் வட்டாட்சியர் அறைக்கு கிழக்கு பக்கம் வடக்கு பார்த்த வாசல் கொண்ட தேர்தல் பிரிவு அறையில் தென்கிழக்கு மூலையில் வடக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த திசையன்விளை முதுநிலை வருவாய் ஆய்வாளர் (தேர்தல்) திரு.ப.ஜயப்பன் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது சட்டையின் முன் பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.3,500/- இருந்தது. அதை தனிநபர் ரொக்க இருப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது ரூ.3,500/- பதிவு இருந்தது. எனவே மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி வட்டாட்சியர் அலுவலக பிரதான அறையில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த திசையன்விளை தாலுகா, கரைசுத்துபுதூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ரா.கார்த்திக் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது கையில் வைத்திருந்த பேக்கில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.5,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.5,000/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

அவரது அருகே நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த திசையன்விளை தாலுகா, கரைசுத்துபுதூர் கிராம உதவியாளர் திரு.அ.பெரியதுரை முத்தையா என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த

போது அதில் பணம் ரூ.1,100/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.1,100/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படியாரது கைபேசி எண்.9486940102-ஐ வாங்கி அதில் உள்ள Google Pay-ல் உள்ள பண பரிவர்த்தனை விபரத்தை சோதனை செய்த போது கடந்த ஜனவரி மாதம் முதல் இதுநாள் வரை மொத்தம் ரூ.41,000/-ம் தனிநபர்களால் வரவு செய்யப்பட்டிருந்தது. அதன் விபரத்தை Screen Shot எடுத்து பிரிண்ட் எடுத்து கைப்பற்றினார்கள். மேலும் அவரை விசாரிக்க திசையன்விளை இந்தியன் வங்கியில் உள்ள அவரது சேமிப்பு கணக்குடன் கைபேசி எண் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அவரது அருகே நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த திசையன்விளை பிர்க்கா, குறுவட்ட வருவாய் ஆய்வாளர் திரு.எம்.கோமதிநாயகம் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.820/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.820/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

அவரது அருகே நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த திசையன்விளை தாலுகா, இரம்மதபுரம், தெற்கு தெரு, கதவு எண்.36/4-ல் வசிக்கும் திரு.சூசை மாணிக்கம் மகனும், மலையன்குளம், ஆர்.சி நிர்மலா தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியருமான திரு.சேவியர் பாலசிங் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது பேண்டின் இடது பக்க முன் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.11,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தனது தந்தை பெயரில் உறுமன்குளம் கிராமத்திற்கு உட்பட்ட இடத்திற்கு யூ.டி.ஆர்-ல் தவறுதலாக பெயர் சேர்க்கப்பட்டதை நீக்கி தனது தந்தை பெயரில் பட்டா வழங்குவது சம்பந்தமாக ஏற்கனவே கொடுத்த மனு சம்பந்தமாக விசாரிக்க வந்ததாக தெரிவித்தார். அவர் தொடர்புடைய மனு சம்பந்தப்பட்ட கோப்பு (பக்கம் 1 முதல் 72 வரை) வட்டாட்சியர் அறையில் இருந்து நகல் எடுத்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த பணம் குறித்து அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.11,000/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி பிரதான அறையின் வாசலின் வடக்கு பக்கம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த அ-6 பிரிவு இளநிலை வருவாய் ஆய்வாளர், திருமதி.ம.க.சூர்யா என்பவரை பெண் தலைமைக்காவலர் திருமதி.சமுத்திரக்கனி உதவியுடன் சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது பேக்கில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில்

பணம் ரூ.700/- இருந்தது. இது தொடர்பாக மேற்படி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனிநபர் ரொக்க கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கையில் மேற்படி பணம் குறித்து பதிவுகள் எதுவும் செய்யவில்லை. மேலும் மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறாதபடியால் மேற்படி பணம் ரூ.700/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி இருக்கையின் மேற்கு பக்கம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த அ-5 பிரிவு இளநிலை வருவாய் ஆய்வாளர், திருமதி.வி.மெர்சி கிரேஸ் என்பவரை பெண் தலைமைக்காவலர் திருமதி.சமுத்திரக்கனி உதவியுடன் சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது பேக்கில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.500/- இருந்தது. இது தொடர்பாக மேற்படி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனிநபர் ரொக்க கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கையில் மேற்படி பணம் குறித்து பதிவுகள் எதுவும் செய்யவில்லை. மேலும் மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறாதபடியால் மேற்படி பணம் ரூ.500/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி இருக்கையின் மேற்கு பக்கம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த எஸ்-1 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.கி.அபிலாஷ் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது சட்டையின் முன்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.400/- இருந்தது. அதை தனிநபர் ரொக்க இருப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது ரூ.400/- பதிவு இருந்தது. எனவே மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கையின் மேற்கு பக்கம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த அ-3 பிரிவு இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.வினோத் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது சட்டையின் முன் பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.200/- இருந்தது. அதை தனிநபர் ரொக்க இருப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது ரூ.200/- பதிவு இருந்தது. எனவே மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கையின் மேற்கு பக்கம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த அ-2 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.மி.ஜெபா என்பவரை பெண் தலைமைக்காவலர் திருமதி.சமுத்திரக்கனி உதவியுடன் சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது ஹேன்ட் பேக்கில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.200/- இருந்தது. அதை தனிநபர் ரொக்க இருப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது ரூ.200/- பதிவு

இருந்தது. எனவே மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது இருக்கைக்கு பின்புறம் இருந்த ஜன்னல் வழியே மூன்று ரூ.500/- தாள்கள் வீசப்பட்ட நிலையில் கிடந்தது. அதனை காவலர் திரு.ஜசக்ராஜா உதவியுடன் எடுத்து சரிபார்த்து ரூ.1,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி இருக்கையின் மேற்கு பக்கம் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த அ-1 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.மு.முத்து செல்வபாரதி என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.600/- இருந்தது. அதை தனிநபர் ரொக்க இருப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது ரூ.600/- பதிவு இருந்தது. எனவே மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது இருக்கைக்கு பின்புறம் இருந்த ஜன்னல் வழியே ஒரு ரூ.500/- தாள் வீசப்பட்ட நிலையில் கிடந்தது. அதனை காவலர் திரு.ஜசக்ராஜா உதவியுடன் எடுத்து சரிபார்த்து ரூ.500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி இருக்கையின் தெற்கு பக்கம் காலியாக இருந்த தலைமையிடத்து துணை வட்டாட்சியர் இருக்கையின் தெற்குபுறம், வடக்கு பார்த்து போடப்பட்ட இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த அலுவலக உதவியாளர் திரு.சு.சுப்பையா பாண்டி என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரிடம் எந்த பணமும் இல்லை. மேலும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் இருக்கையின் பின்புறம் இருந்த ஜன்னல் வழியே கருப்பு நிற பர்ஸ் ஒன்று காணப்பட்டது. அதனை காவலர் திரு.ஜசக்ராஜா உதவியுடன் எடுத்து வந்து சோதனை செய்து பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.3,000/- மற்றும் திரு.சுப்பையா பாண்டி என்பவரது ஓட்டுநர் உரிமத்தின் நகல் (TN72V20130000616) காணப்பட்டது. மேற்படி பர்ஸ் பற்றி திரு.சுப்பையா பாண்டியிடம் கேட்க அவர் அது தனது பர்ஸ் என்றும், விசாரணைக்கு பயந்து தான் ஜன்னல் வழியாக வெளியே வீசியதாகவும் தெரிவித்தார். எனவே மேற்படி கருப்பு நிற பர்ஸ், அதில் இருந்த பணம் ரூ.3,000/- மற்றும் திரு.சுப்பையா பாண்டி என்பவரது ஓட்டுநர் உரிமத்தின் நகல் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு கிழக்கு பக்கம் வடக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த அ-7 பிரிவு இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.பி.பாரதிதாசன் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரிடம் எந்த பணமும் இல்லை.

மேற்படி பிரதான அறைக்கு கிழக்கு பக்கம் உள்ள வராண்டாவை தொடர்ந்து கிழக்கு பக்கம் உள்ள கூட்ட அரங்கின் வடக்கு பக்கம் முதலில் அமைந்துள்ள பூட்டிய நிலையில் காணப்பட்ட சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் அறைக்கு கிழக்கு பக்கம் வடக்கு பார்த்த வாசல் கொண்ட அறையில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த அ-4 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.க.திவ்யா என்பவரை பெண் தலைமைக்காவலர் திருமதி.சமுத்திரக்கனி உதவியுடன் சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை ளஎடுத்து ஆஜர் செய்ய

சொல்ல, அவரது பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.200/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.200/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையின் கிழக்குபுறம் உள்ள வட்ட வழங்கல் அலுவலரது அறை பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

மேற்படி பிரதான அறைக்கு கிழக்கு பக்கம் உள்ள வராண்டாவில் வடக்கு பக்கம் அமைந்துள்ள மாடிப்படிக்கு செல்லும் வழியாக முதல் தளத்திற்கு சென்று கிழக்கு பக்கம் மேற்கு பார்த்து வாசல் கொண்ட நிலஅளவை பிரிவு அறையை சோதனை செய்ய அதில் மேற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த சேரன்மகாதேவி கோட்ட நில அளவை ஆய்வாளர் திரு.ஏ.பெருமாள் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது பேன்டின் வலது பின்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.3,800/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறாதபடியால் மேற்படி பணம் ரூ.3,800/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு வடக்கு பக்கம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த நிலஅளவை, வட்ட துணை ஆய்வாளர் திருமதி.எஸ்.பீர் பாத்திமா என்பவரை பெண் தலைமைக்காவலர் திருமதி.சமுத்திரக்கனி உதவியுடன் சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.260/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.260/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு மேற்கு பக்கம் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த நில அளவை வட்ட சார் ஆய்வாளர் திரு.மு.தினேஷ் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.950/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.950/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு அருகில் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த திருநெல்வேலி உதவி இயக்குநர் நில அளவை பிரிவில் சார் ஆய்வாளராக பணிபுரிந்து Deputation-ல் திசையன்விளை வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு.பெ.மாரியப்பன் என்பவரை

சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.860/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.860/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு அருகில் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த ஒப்பந்த அடிப்படையில் உரிமம் பெற்ற நில அளவர் திரு.மா.சீனிவாச ராகவன் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.860/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.860/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு அருகில் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த ஒப்பந்த அடிப்படையில் உரிமம் பெற்ற நில அளவர் திரு.எம்.பிச்சைக்கனி என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரிம் எந்த பணமும் இல்லை.

மேற்படி இருக்கைக்கு அருகில் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த இராதாபுரம் வட்டாட்சியர் அலுவலக நில அளவை சார் ஆய்வாளர் திரு.ம.விக்னேஷ்வரன் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரிம் எந்த பணமும் இல்லை.

மேற்படி இருக்கைக்கு அருகில் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த குறுவட்ட நில அளவர் திரு.எம்.வைரவேல் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.510/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.510/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு அருகில் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த ஒப்பந்த அடிப்படையில் உரிமம் பெற்ற நில அளவர் திரு.வே.தினேஷ் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.1,100/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது

மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.1,100/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இருக்கைக்கு அருகில் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த ஒப்பந்த அடிப்படையில் திசையன்விளை புல உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ரா.சுயம்புலிங்க ஹரிஷ் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரது சட்டையின் ளஇடது முன்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.3,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறாதபடியால் மேற்படி பணம் ரூ.3,000/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்பு வட்டாட்சியர் அலுவலக தரைதளத்தின் போர்டிகோவில் நின்று கொண்டிருந்த பதிவு எண்.TN 72 G 1696 பொலிரோ அரசு வாகனத்தின் அருகே நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த வட்டாட்சியரின் வாகன ஓட்டுநர் திரு.ஆர்.நம்பி நாராயணன் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவரிம் எந்த பணமும் இல்லை. மேலும் மேற்படி வாகனத்தை சோதனை செய்ய அதன் டேஷ் போர்டில் பணம் ரூ.1,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. மேலும் இது தொடர்பாக மேற்படி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனிநபர் ரொக்க கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கையில் மேற்படி பணம் குறித்து பதிவுகள் எதுவும் செய்யவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.1,000/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி வாகன ஓட்டுநரது கைபேசி எண்.7708489312-ஐ வாங்கி அதில் உள்ள Google Pay-ல் உள்ள பண பரிவர்த்தனை விபரத்தை சோதனை செய்த போது கடந்த பிப்ரவரி மாதம் முதல் இதுநாள் வரை மொத்தம் ரூ.34,900/-ம் தனிநபர்களால் வரவு செய்யப்பட்டிருந்தது. அதன் விபரத்தை Screen Shot எடுத்து பிரிண்ட் எடுத்து கைப்பற்றினார்கள். மேலும் அவரை விசாரிக்க நாங்குநேரி பாரத ஸ்டேட் வங்கியில் உள்ள அவரது சேமிப்பு கணக்குடன் கைபேசி எண் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கை இன்று (17.07.2026) இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். M.தங்கராஜ், திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம்.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli District and original FIR were sent to the Hon'ble Principal District and Sessions Judge, Tirunelveli and copies sent to concerned higher officials.

18/7/26

D. Robin Cleanasingh

Deputy of Police

VACB Tirunelveli.